www.Padasalai.Net KANCHIPURAM DT www.Trbtnpsc.Com

**A**

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:** 20×1=20

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது ________
   அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்
2. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு
3. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது ________
   அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
   இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
4. GAAP என்பது
   அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை
5. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது?
   அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
   இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்
6. பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
   அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபடவேண்டிய சம்பள கணக்கு
   இ) மகேஷ் கணக்கு ஈ) பாலன் நிறுவனம்
7. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும்போது நடவடிக்கைகள் பாதிப்பது ________
   அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்
   இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில் ஈ) குறைந்த பட்சம் மூன்று கணக்குகள்
8. கு.ப.எ. என்பது ________
   அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
   இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்
9. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது ________
   அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்பு கணக்கு இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு
10. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
    அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
    இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்
11. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
    அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
    இ) ஒரு பருவகாலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை
12. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்?
    அ) பற்பல கடனீந்தோர் கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
    இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



13. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?

அ) அனைத்து சரக்குகளின் விற்பனை

ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

14. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம் ________

அ) பற்றுக்குறிப்பு ஆ) வரவு குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது

15. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம் ________

அ) ரொக்க ஏடு ஆ) பேரேடு இ) உரிய குறிப்பேடு ஈ) கொள்முதல் ஏடு

16. ரொக்க ஏடு ஒரு ________

அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு

இ) உரிய குறிப்பேடு ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

17. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு

அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

18. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு ________

அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு

இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

19. வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது

அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்

ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்

இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்

ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

20. ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹ 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக்கட்டணம் ₹ 50. ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?

அ) ₹ 1,950 வரவு இருப்பு ஆ) ₹ 1,950 பற்று இருப்பு

இ) ₹ 2,050 பற்று இருப்பு ஈ) ₹ 2,050 வரவு இருப்பு

## பகுதி - ஆ

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7×2=14

21. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.

22. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

23. குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?

24. தனிப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



25. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?

26. *பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக:*

அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ஆ) கடனுக்கு சரக்கு விற்றது

இ) கடனுக்கு சரக்கு வாங்கியது

ஈ) சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு

27. *பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக:*

| | | |
|---|---|---|
| அ) கொள்முதல் க/கு ப | 10,000 | |
| ......................க/கு | | 10,000 |
| (இராமிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது) | | |
| ஆ) ................. க/கு ப | 30,000 | |
| ரொக்க க/கு | | 30,000 |
| (சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது) | | |

28. *பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.*

அ) இந்தியன் வங்கி ஆ) விற்பனை இ) நற்பெயர் ஈ) எடுப்பு

29. உரிய குறிப்பேடு என்றால் என்ன?

30. "இருப்பு கீ/கொ" என்பதில் "கீ/கொ" என்பதன் விரிவாக்கம் தருக.

## பகுதி - இ

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7×3=21**

31. கணக்கியலின் பொருளை விளக்குக.

32. "பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்" - விவரி.

33. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

34. *கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:*

| *சொத்துகள்* | = | *முதல்* | + | *பொறுப்புகள்* |
|---|---|---|---|---|
| அ) 80,000 | = | ................. | + | 60,000 |
| ஆ) ................. | = | 40,000 | + | 30,000 |
| இ) 75,000 | = | 25,000 | + | ................. |

35. *குறிப்பேட்டு பதிவு தருக:*

1. ரொக்கம் ₹ 4,00,000 மற்றும் சரக்கிருப்பு ₹ 5,00,000த்துடன் தொழில் தொடங்கியது.
2. A என்பவருக்கு சரக்கு விற்பனை செய்து நிகழ்நேர மொத்த தீர்வகம் (RTGS) மூலமாக ரொக்கம் பெற்றது. ₹ 2,50,000
3. Z என்பவருக்கு கடன் விற்பனை செய்தது. ₹ 20,000.

36. கீழே கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கொண்டு குமார் எழுதுபொருள் நிறுவனத்திற்கு ஜூலை 2017க்குரிய விற்பனை ஏட்டினை தயார் தருக.

2017 ஜூலை 5 சாயல்குடி, சரவணா நிறுவனத்திற்கு கடனுக்கு விற்பனை செய்தது
10 A4 தாள்கள் கட்டுகள், ஒரு கட்டு ₹ 250 வீதம்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



ஜூலை 8 இராஜாவிற்கு ரொக்கத்திற்கு விற்றது
15 A4 தாள்கள் கட்டுகள், ஒரு கட்டு ₹ 250 வீதம்,
ஜூலை 20 முதுகளத்தூர் மோகனுக்கு விற்றது
5 வெள்ளை அட்டைகள், ஒரு அட்டை ₹ 2,200 வீதம்

37. ரொக்கத் தள்ளுபடிக்கும், வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. (ஏதேனும் மூன்று)

38. *கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக.*
அ) கை ரொக்கம் ஆ) முதல் இ) உள்தூக்குக் கூலி ஈ) பற்பல கடனீந்தோர்
உ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ஊ) மின்கட்டணம்

39. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
*சொத்துகள்:* ரொக்கம் ₹ 40,000 சரக்கிருப்பு ₹ 50,000 ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹ 20,000 இயந்திரம் ₹ 40,000
*பொறுப்புகள் :* விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹10,000 தொடக்க பதிவினைத் தந்து, வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.

40. கீழ்க்கண்ட இருப்பாய்வில் சில பிழைகள் உள்ளன. அவற்றை சரி செய்து மீண்டும் ஒரு இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

31.03.2017 ஆம் நாளைய இருப்பாய்வு

| கணக்கின் பெயர் | *பற்று இருப்பு ₹* | *வரவு இருப்பு₹* |
|---|---|---|
| கொள்முதல் திருப்பம் | 2,600 | |
| பெற்ற தள்ளுபடி | 3,000 | |
| வங்கி மேல் வரைப்பற்று | 10,000 | |
| கடனீந்தோர் | 50,000 | |
| பொருந்துகைகள் | | 5,600 |
| கடனாளிகள் | | 60,000 |
| மொத்தம் | 65,600 | 65,600 |

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35**

41. அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் முரளியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| i) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ₹ 80,000 |
| ii) | இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | ₹ 10,000 |
| iii) | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | ₹ 6,000 |
| iv) | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | ₹ 8,000 |
| v) | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | ₹ 2,000 |

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



42. அ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| விவரம் | | ₹ |
|---|---|---|
| ஜனவரி | | |
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40,000 |
| 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 5,000 |
| 4 | லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10,000 |
| 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 11,000 |
| 6 | சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது | 5,000 |
| 7 | லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது. | |
| 8 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 4,000 |
| 9 | மின்கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது | 1,000 |
| 10 | நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் | 300 |

(அல்லது)

ஆ) 2018 மார்ச் 31 ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார் செய்து ரொக்க ஏட்டின்படியான இருப்பினை கண்டறிக.

| விவரம் | ₹ |
|---|---|
| i) வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பு | 15,000 |
| ii) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 2,500 |
| iii) வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 250 |
| iv) வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 500 |
| v) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரொக்க ஏட்டின் பதியப்படவில்லை | 300 |
| vi) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 900 |

43. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| | விவரம் | ₹ |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 1 | ஷர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| 6 | குமாரிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| 10 | வாடகை கொடுத்தது | 3,000 |
| 20 | ரவியிடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |

(அல்லது)

ஆ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,24,500 | வங்கி மேல்வரைப்பற்று | 5,800 |
| எடுப்புகள் | 2,000 | மகிழ்வுந்து | 20,000 |
| பெற்றகடன் | 7,000 | பொதுச்செலவுகள் | 2,500 |
| விற்பனை | 53,400 | கட்டடம் | 1,10,000 |
| கொள்முதல் | 40,000 | சரக்கிருப்பு | 16,200 |

44. அ) 2017, மே மாதத்திற்கான இராமலிங்கம் அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | விவரம் | ₹ |
|---|---|---|
| மே 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 | ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 10 | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 18 | கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 | வட்டி பெற்றது | 500 |

(அல்லது)

ஆ) இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?

45. அ) பின்வரும் தகவல்களிலிருந்து முன் பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 | விவரம் | ₹ |
|---|---|---|
| ஜனவரி.1 | சில்லறைச் செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது | 500 |
| 2 | பயணச் செலவுக்கு கொடுத்தது | 5 |
| | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 12 |
| 3 | தபால் செலவு செய்தது | 15 |
| | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | 66 |
| 4 | எழுதுபொருள் வாங்கியது | 134 |
| | போக்குவரத்துச் செலவுக்கு கொடுத்தது | 18 |
| 5 | பழுதுபார்ப்புச் செலவு செய்தது | 65 |
| | பேருந்துக் கட்டணம் செலுத்தியது | 11 |
| | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 24 |

(அல்லது)

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



ஆ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2017 | விவரம் | ₹ |
|---|---|---|
| ஜுன் 1 | ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 8,000 |
| 8 | தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 9,000 |
| 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 4,000 |
| 20 | சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது | 5,000 |

46. அ) பின்வரும் விவரங்களை கொண்டு இராபர்ட் அறைகலன் நிறுவனத்தின் 2017 ஜுன் மாதத்திற்கான கொள்முதல் ஏடு மற்றும் கொள்முதல் திருப்ப ஏடு தயாரிக்கவும்.

2017

ஜுன் 1 பாலு நிறுவனத்திடம் ஒன்று ₹ 150 வீதம் ₹ 20 நாற்காலிகள் கடனுக்கு வாங்கியது

ஜுன் 13 சுபாஷிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒன்று ₹ 3,100 வீதம் 2 அலமாரிகள்
ஒன்று ₹ 1,500 வீதம் 10 மேசைகள்

ஜுன் 21 பழுதடைந்து இருந்ததால் பாலு நிறுவனத்திற்கு 2 நாற்காலிகள் திருப்பி அனுப்பப்பட்டன, ரொக்கம் பெறப்படவில்லை

ஜுன் 24 சன்ரைஸ் நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது
ஒன்று ₹ 1,300 வீதம் 25 அலமாரிகள்

ஜுன் 27 மௌலியிடம் கடனுக்கு வாங்கியது
ஒன்று ₹ 3,275 வீதம்10 நிர்வாக மேசைகள்

ஜுன் 29 பழுதடைந்த மூன்று அலமாரிகள் சன்ரைஸ் நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை.

**(அல்லது)**

ஆ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.

47. அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2018 | விவரம் | ₹ |
|---|---|---|
| மார்ச் 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதியவும்.

| 2017 | | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | கை ரொக்கம் | 11,500 |
| | 5 | ரொக்க வைப்பு இயந்திரத்தின் மூலம் | |
| | | இராமநாதனுக்கு செலுத்தியது | 300 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 10 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 400 |
| | 10 | இராஜ்கோபாலிடமிருந்து ரொக்கம் பெற்றது | 980 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 20 |
| | 15 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 400 |
| | 21 | சாந்தி என்பவருக்கு ரொக்கம் செலுத்தியது | 295 |
| | | அவரிடம் பெற்ற தள்ளுபடி | 5 |
| | 25 | கூலி ரொக்கமாகச் செலுத்தியது | 50 |
| | 31 | சஞ்சீவ் என்பவருக்கு ₹ 390 அளித்த கணக்கை | |
| | | முழுவதும் தீர்த்துக் கொண்டது | 400 |

-----------

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

## காஞ்சிபுரம், கடலூர், தேனி, திருவாரூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்
## காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023
### 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20 | | |
|---|---|---|
| 1 | ஆ | காரியதரிசிகளின் கணக்கியல் |
| 2 | ஆ | பணியாளர் |
| 3 | ஆ | நிறுவன தொடர்ச்சி கருத்து |
| 4 | ஆ | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் |
| 5 | இ | பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் |
| 6 | ஆ | கொடுபடவேண்டிய சம்பள கணக்கு |
| 7 | அ | குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் |
| 8 | ஆ | குறிப்பேட்டு பக்க எண் |
| 9 | இ | முதல் கணக்கு |
| 10 | ஈ | அனைத்து கணக்குகளும் |
| 11 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளில் |
| 12 | இ | எடுப்புகள் கணக்கு |
| 13 | இ | அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை |
| 14 | இ | இடாப்பு |
| 15 | இ | உரிய குறிப்பேடு |
| 16 | ஈ | துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் |
| 17 | இ | ஒரு சொத்து |
| 18 | ஈ | சில்லறை ரொக்க ஏடு |
| 19 | ஆ | வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும் |
| 20 | அ | ₹. 1,950 வரவு இருப்பு |

### பகுதி - II

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. **கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.**

1. ரொக்க அடிப்படை
2. நிகழ்வு அடிப்படை அல்லது வணிக அடிப்படை
3. கலப்பு அல்லது கலப்பின அடிப்படை

22. **கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?**

- கணக்கியல் கருத்துகள் என்பது, கணக்கியல் அடிப்படை அனுமானங்கள் ஆகும்.
- மேலும் கணக்கியல் கருத்துகள் என்பது, பரந்த ஒருமித்த கருத்துகளின் விளைவாகும்.



23. **குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?**

- நடவடிக்கைகள் ஏற்பட்டவுடன் , அதன் பற்று மற்றும் வரவு தன்மைகளை பகுப்பாய்வு செய்யப்பட்டு குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுவதையே, குறிப்பேட்டில் பதிவு செய்தல் எனப்படுகின்றது.

24. **தனிப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக**

ப “ ----------- “ அவர்களின் தனிப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இரசீது எண் | பே.ப. எண் | தொகை ₹ | நாள் | செலுத்தல்கள் | சான்று சீட்டு எண் | பே.ப.எண் | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

25. **வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?**

- ரொக்க ஏட்டில் செய்யப்படக் கூடிய ஒவ்வொரு பதிவிற்கும், வங்கியரால் பராமரிக்கப்படக்கூடிய செல்லேட்டில் சரிநிகர் பதிவு இருக்க வேண்டும்.
- அதேபோன்று வங்கிச் செல்லேட்டில் உள்ள ஒவ்வொரு பதிவிற்கும் சரிநிகர் பதிவு ரொக்க ஏட்டில் இருக்க வேண்டும்.
- வங்கி இருப்பு இரு ஏடுகளிலும் ஒரே தொகையினைக் காண்பிக்க வேண்டும்.
- இரண்டு இருப்புகளும் வெவ்வேறாக இருந்தால், அதற்கான காரணங்களை விளக்குவதற்காக தயாரிக்கப்படும் அறிக்கையையே, வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

26. **பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்யவேண்டும் என்று குறிப்பிடுக.**

அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது - **ரொக்க ஏட்டில்**

ஆ) கடனுக்கு சரக்கு விற்றது - **விற்பனை ஏட்டில்**

இ) கடனுக்கு சரக்கு வாங்கியது - **கொள்முதல் ஏட்டில்**

ஈ) சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு - **கொள்முதல் திருப்ப ஏட்டில**

27.

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | கொள்முதல் க/கு ப<br>இராம் க/கு<br>( இராமிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| ஆ | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தபயனுக்காக ரொக்கம் எடுத்தது ) | | 30,000 | 30,000 |



www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

28.

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ | இந்தியன் வங்கி | ஆள்சார் கணக்கு |
| ஆ | விற்பனை | பெயரளவு கணக்கு |
| இ | நற்பெயர் | சொத்து கணக்கு |
| ஈ | எடுப்பு | ஆள்சார் கணக்கு |

29. உரிய குறிப்பேடு என்றால் என்ன?

- துணை ஏடுகளான ரொக்க ஏடு, கொள்முதல் ஏடு, விற்பனை ஏடு, கொள்முதல் திருப்ப ஏடு, விற்பனைத் திருப்ப ஏடு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு போன்ற ஏடுகளில் பதிய முடியாத எஞ்சிய பதிவுகளை பதிவு செய்யும் ஏடு உரிய குறிப்பேடு எனப்படுகின்றன,

30. கீ/ கொ - கீழ் கொண்டுவரப்பட்டது

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. கணக்கியலின் பொருளை விளக்குக.

- கணக்கியல் என்பது , நிதியியல் தகவல்களை, இனம் காணுதல், அளவிடுதல், பதிவு செய்தல், வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், உய்த்துணர்தல் மற்றும் தகவல்களைத் தெரிவித்தல் போன்ற முறையான செயல்பாடுகளை உள்ளடக்கியது.

32. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' – விவரி.

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிடமுடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.
- பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்ய முடிகிறது.

33. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

1) ஆள்சார் கணக்கு
- 'பெறுபவரை பற்று செய் மற்றும் தருபவரை வரவு செய்.'
- ஆள்சார்கணக்கில் பலனைப் பெறும் நபரின் கணக்கை பற்று வைக்க வேண்டும் மற்றும் பலனைத் தரும் நபரின் கணக்கை வரவு வைக்க வேண்டும்.

2) சொத்து கணக்கு
- 'உள்வருவதை பற்று செய் மற்றும் வெளிச்செல்வதை வரவு செய்'.
- சொத்து கணக்கு என்றால் விதியின்படி உள் வருவதை பற்று செய்ய வேண்டும். வெளிச் செல்வதை வரவு செய்ய வேண்டும்.



3) பெயரளவு கணக்கு
- 'செலவுகளையும் நட்டங்களையும் பற்று செய் மற்றும் வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்'.
- பெயரளவு கணக்குகளின் விதிப்படி, செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்யவேண்டும். வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்ய வேண்டும்.

34. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 80,000 | = | 20,000 | + | 60,000 |
| (ஆ) | 70,000 | = | 40,000 | + | 30,000 |
| (இ) | 75,000 | = | 25,000 | + | 50,000 |

35. குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | ரொக்க க/கு ப<br>சரக்கிருப்பு க/கு ப<br>முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 4,00,000<br>5,00,000 | 9,00,000 |
| | வங்கி க / கு ப<br>விற்பனை க/கு<br>( A என்பவருக்கு விற்பனை செய்தது ) | | 2,50,000 | 2,50,000 |
| | Z க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடன் விற்பனை செய்தது ) | | 20,000 | 20,000 |

36. குமார் எழுதுபொருள் நிறுவனத்தின் ஏடுகளில்

விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே.ப.எண் | தொகை ( ₹ ) விளக்கம் | தொகை ( ₹ ) மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஜூலை 5 | சாயல்குடி, சரவணா நிறுவனம்<br>10 A4 தாள்கள் கட்டுகள், ஒன்று ₹. 250 வீதம் ( 10 × ₹. 250 ) | | | | 2,500 |
| 20 | முதுகுளத்தூர், மோகன்<br>6 டஜன் எழுதுகோல், ஒன்று ₹. 360 வீதம் ( 6 × ₹. 360 ) | | | | 11,000 |
| | விற்பனை க/கு வ | | | | 13,500 |



www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

37. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ.எண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில், பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| 2 | வழங்கப்படும் காலம் | கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது | பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| 4 | கணக்கேடுளில் பதிவு செய்தல் | இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| 5 | இடாப்பிலிருந்து கழித்து காட்டுதல் | இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது. | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

38. அ) கை ரொக்கம் - பற்று

ஆ) முதல் - வரவு

இ) உள்தூக்குக் கூலி - பற்று

ஈ) பற்பல கடனீந்தோர் - வரவு

உ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு - வரவு

ஊ) மின்கட்டணம் - பற்று

39. **வினோத்தின் தொடக்கப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 | ரொக்கம் க/கு ப | | 40,000 | |
| | சரக்கிருப்பு க/கு ப | | 50,000 | |
| | கடனாளிகள் க/கு (ராம் க/கு) ப | | 20,000 | |
| | இயந்திரம் க/கு ப | | 40,000 | |
| | விஜய் க/கு (கடனீந்தோர் ) | | | 10,000 |
| | வினோத் முதல் க/கு (சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது) | | | 1,40,000 |



**பேரேட்டுக் கணக்குகள்**

**வினோத் முதல் கணக்கு**

ப வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 ஜன 31 | இருப்பு கீ/இ | | 1,40,000 | 2018 ஜன 1 | பற்பல சொத்துகள் க/கு | | 1,40,000 |
| | | | 1,40,000 | | | | 1,40,000 |
| | | | | 2017 பிப் 1 | இருப்பு கீ/ கொ | | 1,40,000 |

40.

**இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கொள்முதல் திருப்பம் | | | 2,600 |
| 2 | பெற்ற தள்ளுபடி | | | 3,000 |
| 3 | விங்கி மேல்வரைப்பற்று | | | 10,000 |
| 4 | கடனீந்தோர் | | | 50,000 |
| 5 | பொருத்துகைகள் | | 5,600 | |
| 6 | கடனாளிகள் | | 60,000 | |
| | மொத்தம் | | 65,600 | 65,600 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| 1. பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் இதில் எடுத்தெழுதப்படும் |
| 2. பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | இது இரண்டாவது நிலையாகும். |
| 3. பதிவு செய்யும் | நடவடிக்கைகள் நிகழ்ந்த | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் |



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | வரிசை | வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | செய்யப்படுகின்றன. |
| 4. | வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| 5. | இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| 6. | பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| 7. | நிகர இருப்பு | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |

( அல்லது )

41 ஆ) **கணக்கியல் சமன்பாடு**

| வ எ ண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் | | | = | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | அறை கலன் | = | முதல் ₹. | கடனீந்தோர் ₹. |
| i) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | + 80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| | சமன்பாடு | +80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| ii) | கடன் கொள்முதல் | 0 | + 10,000 | 0 | = | 0 | + 10,000 |
| | சமன்பாடு | +80,000 | + 10,000 | 0 | = | + 80,000 | + 10,000 |
| iii) | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | - 6,000 | 0 | + 6,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +74,000 | + 10,000 | + 6,000 | = | + 80,000 | + 10,000 |
| iv) | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | - 8,000 | 0 | 0 | = | 0 | - 8,000 |
| | சமன்பாடு | +66,000 | + 10,000 | + 6,000 | = | + 80,000 | + 2,000 |
| v) | ரொக்க கொள்முதல் | - 2,000 | + 2,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +64,000 | + 12,000 | + 6,000 | = | + 80,000 | + 2,000 |
| | சமன்பாடு | +82,000 | | | = | + 82,000 | |





42 அ) **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜன 1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலி முதல் க/கு<br>( ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 80,000 | 80,000 |
| 2 | வங்கி க / கு ப<br>ரொக்க க / கு<br>( வங்கியில் ரொக்கம் செலுத்தியது ) | | 40,000 | 40,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்க கொள்முதல் செய்தது ) | | 5,000 | 5,000 |
| 4 | கொள்முதல் க/கு ப<br>லிப்டன் நிறுவன க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 10,000 | 10,000 |
| 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 11,000 | 11,000 |
| 6 | சம்பளம் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சம்பளம் வழங்கியது ) | | 5,000 | 5,000 |
| 7 | லிப்டன் நிறுவன க/கு ப<br>வங்கி க/கு<br>( காசோலை மூலம் செலுத்தியது ) | | 10,000 | 10,000 |
| 8 | அறைகலன் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 4,000 | 4,000 |
| 9 | மின்கட்டண க/கு ப<br>ரொக்க க/கு<br>( மின்கட்டணம் செலுத்தியது ) | | 1,000 | 1,000 |
| 10 | காப்பீட்டு முனைமம் க/கு ப<br>வங்கி க/கு<br>( காப்பீட்டு முனைமம் செலுத்தியது ) | | 300 | 300 |

( அல்லது )



www.Padasalai.Net

42. ஆ)

31.03.2018 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பு | | 15,000 |
| **கூட்டுக:** | | |
| வங்கிக் கட்டணம் பதியப்படாதது | 250 | |
| வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி, ரொக்க ஏட்டில் பதியப்படாதது | 500 | |
| காப்பீட்டு முனைமம் பதியப்படாதது | 300 | |
| செலுத்திய காசோலை வரவு வைக்கப்படாதது | 900 | 1,950 |
| | | 16,950 |
| **கழிக்க:** | | |
| விடுத்த காசோலை முன்னிலைப்படுத்தப்படாதது | | 2,500 |
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 14,450 |

43. அ)

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 1 | ரொக்க க/கு ப<br>ஷர்மா முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 70,000 | 70,000 |
| 6 | ரொக்க க / கு ப<br>குமார் க / கு<br>( குமாரிடமிருந்து பெற்ற ரொக்கம் ) | | 10,000 | 10,000 |
| 10 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 3,000 | 3,000 |
| 20 | ரொக்க க/கு ப<br>பெற்ற கழிவு க/கு<br>( ரவியிடமிருந்து பெற்ற கழிவு ) | | 5,000 | 5,000 |

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

பேரேட்டுக் கணக்குகள்

ப ரொக்க கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆகஸ் 1 | ஷர்மா முதல் க/கு | | 70,000 | 2017 ஆகஸ் 10 | வாடகை க/கு | | 3,000 |
| 6 | குமார் க/கு | | 10,000 | 31 | இருப்பு கீ/ இ | | 82,000 |
| 20 | பெற்ற கழிவு க/கு | | 5,000 | | | | |
| | | | 85,000 | | | | 85,000 |
| 2017 செப் 1 | இருப்பு கீ/கொ | | 82,000 | | | | |

ப ஷர்மா முதல் கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017ஆக 31 | இருப்பு கீ/ இ | | 70,000 | 2017 ஆக 1 | ரொக்க க/கு | | 70,000 |
| | | | 70,000 | | | | 70,000 |
| | | | | 2017 செப் 1 | இருப்பு கீ/கொ | | 70,000 |

ப குமார் கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆக 31 | இருப்பு கீ/இ | | 10,000 | 2017 ஆக 6 | ரொக்க க/கு | | 10,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| | | | | 2017 செப் 1 | இருப்பு கீ/ கொ | | 10,000 |

ப வாடகை கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆக 10 | ரொக்க க/கு | | 3,000 | 2017 ஆக 31 | இருப்பு கீ/ இ | | 3,000 |
| | | | 3,000 | | | | 3,000 |
| 2017 செப் 1 | இருப்பு கீ/கொ | | 3,000 | | | | |

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

ப **பெற்ற கழிவு கணக்கு** வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆக 31 | இருப்பு கீ/இ | | 5,000 | 2017 ஆக 1 | ரொக்க க/கு | | 5,000 |
| | | | 5,000 | | | | 5,000 |
| | | | | 2017 செப் 1 | இருப்பு கீ/ கொ | | 5,000 |

( அல்லது )

43. ஆ) **பாபு என்பவரின் ஏடுகளில் 31. 3. 2017 ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 1,24,500 |
| 2 | எடுப்புகள் | | 2,000 | |
| 3 | பெற்ற கடன் | | | 7,000 |
| 4 | விற்பனை | | | 53,400 |
| 5 | கொள்முதல் | | 40,000 | |
| 6 | வங்கி மேல்வரைப்பற்று | | | 5,800 |
| 7 | மகிழ்வுந்து | | 20,000 | |
| 8 | பொதுச் செலவுகள் | | 2,500 | |
| 9 | கட்டடம் | | 1,10,000 | |
| 10 | சரக்கிருப்பு | | 16,200 | |
| | மொத்தம் | | 1,90,700 | 1,90,700 |

44. அ) **இராமலிங்கம் என்பவரின் ஏடுகளில்**

ப **தனிப்பத்தி ரொக்க ஏடு** வ

| நாள் | பெறுதல்கள் | பே.ப. எண் | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | பே.ப.எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 மே1 | இருப்பு கீ/கொ | | 40,000 | 2017 மே 7 | கூலி க/கு | | 2,000 |
| 5 | ஸ்வாதி க/கு | | 4,000 | 10 | கொள்முதல் க/கு | | 6,000 |
| 15 | விற்பனை க/கு | | 9,000 | 18 | கணிப்பொறி க/கு | | 15,000 |
| 30 | வட்டி க/கு | | 500 | 22 | சபாபதி க/கு | | 5,000 |
| | | | | 28 | சம்பளம் க/கு | | 2,500 |
| | | | | 31 | இருப்பு கீ / இ | | 23,000 |
| | | | 53,500 | | | | 53,500 |
| ஜூன்1 | இருப்பு கீ/கொ | | 23,000 | | | | |



( அல்லது )

44.ஆ) இருப்பாய்வு தயாரிப்பதின் நோக்கங்கள் யாவை?

1. **கணக்கீட்டின் சரித்தன்மையை பரிசோதனை செய்ய உதவுகிறது:**
   - இருப்பாய்வு என்பது கணக்கேடுகள் பராமரிப்பு பணியில், கணக்கீட்டின் சரித்தன்மையை சரிபார்க்க உதவும் ஒரு வழிமுறை ஆகும்.
2. **இறுதி கணக்குகளைத் தயாரிக்க அடிப்படையாக உள்ளது**
   - இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளை அடிப்படையாகக் கொண்டு, நிதிநிலை அறிக்கைகளான, வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்குகளையும் மற்றும் இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க முடியும்.
3. **பிழைகளைக் கண்டுபிடிக்க உதவுகிறது**
   - இருப்பாய்வு எப்போதாவது சமன்படாவிட்டால், அது கணக்கேடுகளில் பிழைகள் நேர்ந்திருக்கும் என்பதனை உணர்த்தும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கணக்கியல் செயல்முறை நிலைகளில் பிழைகள் ஏற்பட்டிருக்கலாம்.
   - எனவே, அப்பிழைகளை கண்டறிந்து ,அவை இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் முன்பு சரி செய்யப்பட வேண்டும்.
4. **பேரேட்டுக் கணக்குகள் குறித்த தகவல்களை சுருக்கமாக தருகிறது**
   - பேரேட்டுக் கணக்குகளின் தொகுப்பை இருப்பாய்வு காட்டுகிறது.
   - ஒரு குறிப்பிட்ட கணக்கின் முழுவிவரங்களையும் அறிய வேண்டுமானால் பேரேட்டுக் கணக்குகளைத்தான் பார்க்கவேண்டும்.

45.அ) ப **பாகுப்பாடுத்தப்பட்ட சி ல் லறை ரொக்க ஏடு** வ

| பெற்ற தொகை ₹. | ரொ.எ.ப.எண் | நாள் | விவரம் | சா.சீ.எண் | மொத்த செலவழித்த தொகை | அஞ்சல் செலவு | வண்டி / கூலி | பயணச் செலவு | எழுது பொருள் | பல்வகைச் செலவுகள் | பே.ப. எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 500 | | 2020 ஜன 1 | ரொக்கம் | | | | | | | | |
| | | 2 | பயணச்செலவு | | 5 | | | 5 | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 12 | | 12 | | | | |
| | | 3 | அஞ்சல் செலவு | | 15 | 15 | | | | | |
| | | | கூலி | | 66 | | 66 | | | | |
| | | 4 | எழுது பொருள்கள் | | 134 | | | | 134 | | |
| | | | போக்குவரத்து செலவுகள் | | 18 | | | 18 | | | |
| | | 5 | பழுதுபார்ப்பு செலவு | | 65 | | | | | 65 | |
| | | | பயணச் செலவுகள் | | 11 | | | 11 | | | |
| | | | வண்டி கட்டணம் | | 24 | | 24 | | | | |
| | | | | | 350 | 15 | 102 | 34 | 134 | 65 | |



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 31 | இருப்பு கீ/இ | | 150 | | | | | |
| 500 | | | | | 500 | | | | | |
| 150<br>350 | | பிப்<br>1<br>1 | இருப்பு கீ/கொ<br>ரொக்க க/கு | | | | | | | |

( அல்லது )

45. ஆ) **பேரேட்டுக் கணக்குகள்**

**ரொக்க கணக்கு**

ப | வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017ஜூன் 1 | ராஜா முதல் க/கு | | 50,000 | 2017 ஜூன்15 | கொள்முதல் க/கு | | 4,000 |
| 6 | விற்பனை க/கு | | 8,000 | 30 | இருப்பு கீ/ இ | | 54,000 |
| | | | 58,000 | | | | 58,000 |
| ஜூலை 1 | இருப்புகீ/கொ | | 54,000 | | | | |

**ராஜா முதல் கணக்கு**

ப | வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூன் 30 | இருப்பு கீ/இ | | 50,000 | 2017 ஜூன் 1 | ரொக்க க/கு | | 50,000 |
| | | | 50,000 | | | | 50,000 |
| | | | | ஜூலை 1 | இருப்பு கீ/ கொ | | 50,000 |

**விற்பனை கணக்கு**

ப | வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூன் 30 | இருப்பு கீ/இ | | 17,000 | 2017 ஜூன் 6 | ரொக்க க/கு | | 8,000 |
| | | | | 8 | தேவி க/கு | | 9,000 |
| | | | 17,000 | | | | 17,000 |
| | | | | ஜூலை 1 | இருப்பு கீ/ கொ | | 17,000 |



**தேவி கணக்கு**

ப | வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017ஜூன் 8 | விற்பனை க/கு | | 9,000 | 2017 ஜூன் 30 | இருப்பு கீ/ இ | | 9,000 |
| | | | 9,000 | | | | 9,000 |
| ஜூலை 1 | இருப்பு கீ/கொ | | 9,000 | | | | |

**கொள்முதல் கணக்கு**

ப | வ

| நாள் | விவரம் | கு.ப. எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூன்15 | ரொக்க க/கு | | 4,000 | 2017 ஜூன்30 | இருப்பு கீ/ இ | | 9,000 |
| 20 | சாந்தி க/கு | | 5,000 | | | | |
| | | | 9,000 | | | | 9,000 |
| ஜூலை 1 | இருப்பு கீ/கொ | | 9,000 | | | | |

**சாந்தி கணக்கு**

ப | வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூன் 30 | இருப்பு கீ/இ | | 5,000 | 2017 ஜூன் 20 | ரொக்க க/கு | | 5,000 |
| | | | 5,000 | | | | 5,000 |
| | | | | ஜூலை 1 | இருப்பு கீ/ கொ | | 5,000 |



www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

46. அ) இராபர்ட் அறைகலன் நிறுவனத்தின் ஏடுகளில் கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே. ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஜூன் 1 | பாலு நிறுவனம் 20 நாற்காலிகள், ஒன்று ₹. 150 வீதம் ( 20 × ₹. 150 ) | | | | 3,000 |
| 13 | சுபாஷ் 2 அலமாரிகள், ஒன்று ₹. 3,100 வீதம் ( 2 × ₹. 3,100 ) | | | 6,200 | |
| | 10 மேசைகள் ஒன்று ₹. 1,500 வீதம் ( 10 × ₹. 1,500 ) | | | 15,000 | 21,200 |
| 24 | சன்ரைஸ் நிறுவனம் 25 அலமாரிகள், ஒன்று ₹. 1,300 வீதம் ( 25 × ₹. 1,300 ) | | | | 32,500 |
| 27 | மௌலி 10 நிர்வாக மேசைகள், ஒன்று ₹. 3,275 வீதம் ( 10 × ₹. 3,275 ) | | | | 32,750 |
| | கொள்முதல் க/கு ப | | | | 89,450 |

கொள்முதல் திருப்ப ஏடு

| நாள் | விவரம் | பே, ப,எ | ப.கு.எ | தொகை விளக்கம் | தொகை மொத்தம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 2017 ஜூன் 21 | பாலு நிறுவனம் 2 நாற்காலிகள், ஒன்று ₹. 150 வீதம் ( 2 × ₹. 150 ) | | | | 300 | பழுதடைவு |
| 29 | சன்ரைஸ் நிறுவனம் 3 அலமாரிகள், ஒன்று ₹. 1,300 வீதம் ( 3 × ₹. 1,300 ) | | | | 3,900 | பழுதடைவு |
| | கொள்முதல் திருப்ப க/கு வ | | | | 4,200 | |

( அல்லது )



46. அ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.

i) ஏடுகளைப் பராமரிப்பவர்
- நிதிச் சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.
- நிதிநிலை அறிக்கைகளையும் பிற நிதி அறிக்கைகளையும் தயாரிக்கிறார்.

ii) நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்
- முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிச் சார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

iii) வணிகச் சொத்துக்களின் காப்பாளர்
- சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம், நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது.
- சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

iv) நிதி ஆலோசகர்
- நிதிச் சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து , முதலீட்டுக்கான வாய்ப்புகள், செலவைக் குறைப்பதற்கான உத்திகள், எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவு படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ,வணிக மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

v) வரி மேலாளர்
- குறித்த காலத்தில் வருமானவரி விவரம் தயாரிப்பு செய்தல், மற்றும் வருமானவரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்.
- வரி மேலாண்மை, வரிச் சுமையை குறைத்தல், வரிவிலக்கு பெறுதல் போன்றவற்றில் மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

vi) மக்கள் தொடர்பு அலுவலர்
- தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு, கணக்கியல் பகுப்பாய்வு செய்யத் தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்.

47. அ)

மனோகரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>( மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க / கு ப<br>ரொக்க க / கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 25,000 | 25,000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>கமலேஸ் க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 15,000 | 15,000 |



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 28,000 | 28,000 |
| 10 | ஹரி க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடனுக்கு விற்பனை செய்தது ) | | 10,000 | 10,000 |
| 14 | கமலேஸ் க/கு ப<br>ரொக்க க/கு<br>( கமலேசுக்கு ரொக்கம் செலுத்தியது ) | | 12,000 | 12,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 500 | 500 |
| 25 | ரொக்க க/கு ப<br>ஹரி க/கு<br>( ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது ) | | 8,000 | 8,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது ) | | 4,000 | 4,000 |

( அல்லது )

47.ஆ) ப இருபத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இ.எ | பே.ப.எண் | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் | நாள் | செலுத்தல்கள் | சா.சீ.எ | பே.ப.எ | தொகை ₹ தள்ளுபடி | தொகை ₹ ரொக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 | | | | | | 2017 | | | | | |
| ஜன1 | இருப்பு கீ /கொ | | | | 11,500 | ஜன | | | | | |
| 10 | ராஜகோபால் க/கு | | | 20 | 980 | 5 | இராமநாதன் க/கு | | | 10 | 300 |
| 15 | விற்பனை க/கு | | | | 400 | 8 | கொள்முதல் க/ கு | | | | 400 |
| | | | | | | 21 | சாந்தி க/கு | | | 5 | 295 |
| | | | | | | 25 | கூலி க/கு | | | | 50 |
| | | | | | | 31 | சஞ்சீவ் க/கு | | | 10 | 390 |
| | | | | | | 31 | இருப்பு கீ இ | | | | 11,445 |
| | | | | 20 | 12,880 | | | | | 25 | 12,880 |
| பிப்1 | இருப்பு கீ/ கொ | | | | 11,445 | | | | | | |

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net